**<u>நீதித்துறை நடுவர் கூடுதல் மகளிர் நீதிமன்றம், கோயம்புத்தூர்.</u>**

**முன்னிலை** :– செல்வி.N.G.சிந்து, **B.A., L.L.B.,**
**நீதித்துறை நடுவர்,**
**கூடுதல் மகளிர் நீதிமன்றம்,**
**கோயம்புத்தூர்.**

*2026–ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26–ம் நாள் வியாழக்கிழமை*

திருவள்ளுவராண்டு, 2056, விசுவாவாசு வருடம், மாசி திங்கள் 14ம் நாள் திங்கட்கிழமை)

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் : *1643/2024*</u>**

***<u>CNR No: TNCBOA–047276–2024</u>***

**<u>அரசுக்காக</u> :–**

காவல் ஆய்வாளர்,

கிழக்கு அனைத்து மகளிர் காவல் நிலையம்,

(காவல் நிலைய குற்ற எண் : 35/2024) ... புகார்தாரர்

... எதிர்...

1. விக்னேஷ் (30) த/பெ.ஆறுமுகம்,

க.எண்.38/65, மீனாட்சி அம்மன் நகர்,

சிகண்ட் அவன்யூ, கதிர்மில், ஒண்டிபுதூர்,

கோயமுத்தூர்.

2.ஆறுமுகம்(72) த/பெ.ராமசாமி,

க.எண்.38/65, மீனாட்சி அம்மன் நகர்,

சிகண்ட் அவன்யூ, கதிர்மில், ஒண்டிபுதூர்,

கோயமுத்தூர்.

3. புஷ்பா (62) த/பெ. ஆறுமுகம்,

க.எண்.38/65, மீனாட்சி அம்மன் நகர்,

சிகண்ட் அவன்யூ, கதிர்மில், ஒண்டிபுதூர்,

கோயமுத்தூர்.

4. லோகேஷ் (35) த/பெ. ஆறுமுகம்,

க.எண்.38/65, மீனாட்சி அம்மன் நகர்,

சிகண்ட் அவன்யூ, கதிர்மில், ஒண்டிபுதூர்,

கோயமுத்தூர்.

5. சவிதா (28) க/பெ. லோகேஷ்

க.எண்.38/65, மீனாட்சி அம்மன் நகர்,

சிகண்ட் அவன்யூ, கதிர்மில், ஒண்டிபுதூர்,

கோயமுத்தூர்.

6. கிருஷ்ணமூர்த்தி (52)

த/பெ. அருணாச்சலம்,

க.எண்.9, பாரதிநகர், கோவைபுதூர்,

கோயமுத்தூர்.

7. புவனேஷ்வரி (40) த/பெ.கிருஷ்ணமூர்த்தி

க.எண்.9, பாரதிநகர், கோவைபுதூர்,

கோயமுத்தூர். ... எதிரிகள்

| | | |
|---|---|---|
| **(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு:– R.O.C. No. 814/2020/RG/F1, நாள்: 07.04.2021–ன் படி)** | | |
| **1** | **குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சிறையில் இருந்த காலம்** | 1 முதல் 5 எதிரிகள் மாண்புமிகு உயர் நீதிமன்ற Crl.OP.No.19799/2024தேதி 22.08.2024 ன் உத்தரவின்படி முன்ஜாமீன் பெற்று பிணையில் உள்ளார்கள். 6 மற்றும் 7 எதிரிகள் 41A சம்மன் பெற்று பிணையில் உள்ளார்கள் |
| **2** | **இறுதி அறிக்கை தாக்கல் செய்த தேதி** | 17.12.2024 |
| **3** | **வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி** | பொருந்தாது |
| **4** | **குற்றவியல் விசாரணை முறைச் சட்டம். பிரிவுகள் 228, 240, 246 மற்றும் 251–ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி** | 24.02.2025 |
| **5** | **கு.வி.மு.ச. பிரிவு 317–ஐ போல் வழக்கமாக தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தவிர, மற்ற குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல், அதன் முடிவு** | இல்லை |

<table>
<tr><td></td><td>மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் உத்தரவு உள்பட</td><td></td></tr>
<tr><td>6</td><td>சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட விபரம்</td><td>
<table>
<tr><th>சாட்சிகள்</th><th>முதல் விசாரணை</th><th>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</th><th>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>08.07.2025</td><td>08.07.2025</td><td>08.07.2025</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>21.11.2025</td><td>---</td><td>21.11.2025</td></tr>
</table>
</td></tr>
<tr><td>7</td><td>பிடியாணை பிறப்பிக்கப்பட்ட தேதி</td><td>--</td></tr>
<tr><td>8</td><td>பிடியாணை விலக்கப்பட்ட தேதி</td><td>--</td></tr>
<tr><td>9</td><td>கு.வி.மு.ச. பிரிவு 313-ன் படி குற்றஞ்சாட்டப்பட்டவர்களை கேள்வி கேட்ட தேதி</td><td>11.12.2025</td></tr>
<tr><td>10</td><td>குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவான தேதி, பிடிபட்ட / ஆஜரான தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்)</td><td>இல்லை</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| **11** | **மாண்புமிகு மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய இடைக்கால தடை உத்தரவு மற்றும் அதன் முடிவுகள்** | இல்லை |

| குற்றவியல் நடைமுறை விதிகள் 2019, விதி 106–ன் படியான விவரப்பட்டியல் | | |
|---|---|---|
| 1. | வரிசை எண் | C.C.No.1643/2024 |
| 2. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | கிழக்கு அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.35/2024 |
| 3. | எதிரிகளின் பெயர்கள் | 1. விக்னேஷ் (30) த/பெ.ஆறுமுகம், க.எண்.38/65, மீனாட்சி அம்மன் நகர், சிகண்ட் அவன்யூ, கதிர்மில், ஒண்டிபுதூர், கோயமுத்தூர்.<br><br>2.ஆறுமுகம்(72) த/பெ.ராமசாமி, க.எண்.38/65, மீனாட்சி அம்மன் நகர், சிகண்ட் அவன்யூ, கதிர்மில், ஒண்டிபுதூர், கோயமுத்தூர்.<br><br>3. புஷ்பா (62) த/பெ. ஆறுமுகம், க.எண்.38/65, மீனாட்சி அம்மன் நகர், சிகண்ட் அவன்யூ, கதிர்மில், ஒண்டிபுதூர், கோயமுத்தூர்.<br><br>4. லோகேஷ் (35) த/பெ. ஆறுமுகம், க.எண்.38/65, மீனாட்சி அம்மன் நகர், சிகண்ட் அவன்யூ, கதிர்மில், ஒண்டிபுதூர், கோயமுத்தூர்.<br><br>5. சவிதா (28) க/பெ. லோகேஷ் |
| 4. | தந்தையாரின் பெயர் | |
| 5. | தொழில் | |
| 6. | குடியிருப்பு | |
| 7. | வயது | |

| | | |
|---|---|---|
| | | க.எண்.38/65, மீனாட்சி அம்மன் நகர், சிகண்ட் அவன்யூ, கதிர்மில், ஒண்டிபுதூர், கோயமுத்தூர்.<br><br>6. கிருஷ்ணமூர்த்தி (52) த/பெ. அருணாச்சலம், க.எண்.9, பாரதிநகர், கோவைபுதூர், கோயமுத்தூர்.<br><br>7. புவனேஷ்வரி (40) த/பெ.கிருஷ்ணமூர்த்தி க.எண்.9, பாரதிநகர், கோவைபுதூர், கோயமுத்தூர். |
| 8. | சம்பவம் நடந்த தேதி | 22.02.2024 |
| 9. | முறையீடு செய்யப்பட்ட தேதி | 12.08.2024 |
| 10. | கைது செய்யப்பட்ட தேதி | -- |
| 11. | பிணையில் விடுவித்தல் | 1 முதல் 5 எதிரிகள் மாண்புமிகு உயர் நீதிமன்ற Crl.OP.No.19799/2024தேதி 22.08.2024 ன் உத்தரவின்படி முன்ஜாமீன் பெற்று பிணையில் உள்ளார்கள். 6 மற்றும் 7 எதிரிகள் 41A சம்மன் பெற்று பிணையில் உள்ளார்கள் |
| 12. | ஒப்படைத்தல்/ அனுப்பிவைத்தல்-ன் தேதி | இல்லை |
| 13. | விசாரணை துவங்கப்பட்ட தேதி | 17.03.2025 |
| 14. | விசாரணை முடிவடைந்த தேதி | 11.12.2025 |
| 15. | தண்டனை அல்லது உத்தரவு | ***முடிவில்***, 1 முதல் 7 எதிரிகளின் மீது இதச சட்டப் பிரிவுகள் 498(A), 417, 420, 465, 468, 471 ன் படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபணமாகாததால், அவர்கள் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு |

| | | |
|---|---|---|
| | | செய்து, பி.என்.எஸ்.எஸ்.271(1)–ன் படி அவர்களை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது. |
| 16. | தீர்ப்புரை நகலை வழங்குதல் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான காண்முடிவு / முடிவு | எதிரிக்கு தீர்ப்புரையின் நகல் வழங்கப்படவில்லை. |
| 17. | காலதாமதத்தின் விளக்கம் | – |

இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் 31.12.2024 ம் தேதியன்று இந்நீதிமன்ற வழக்குக் கோப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இறுதியாக 26.02.2026 ம் தேதி இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது, அரசுத் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–II அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர்கள் S.சம்பத் (M.S.No.26/2001), A.ரம்லாபானு (M.S.No.3359/2018) அவர்கள் ஆஜராகி, இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்த பின்பு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## ***தீர்ப்புரை***

இவ்வழக்கானது கிழக்கு அனைத்து மகளிர் காவல் நிலையம், காவல் உதவி ஆய்வாளர் அவர்களால், கு.வி.மு.ச பிரிவு 173(2)ன் கீழ் 17.12.2024 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் அடிப்படையில்,

இதச சட்டப் பிரிவுகள் 498(A), 417, 420, 465, 468, 471 ன் கீழான குற்றச்சாட்டுகளுக்காக கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்காகும்.

2. <u>அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்</u> :

கடந்த 2023 அன்று நிகழ்நிலைபுகார்தாரரை பெண் பார்க்க 1 ம் எதிரியுடன் 2 முதல் 7 எதிரிகள் வந்தார்கள் என்றும், அப்போது 1ம் எதிரி கல்விதகுதி படைத்தவர் என்றும், அவர் 1லட்சரூபாய் வரை சம்பளம் வங்குவதாக சொன்னார்கள் என்றும், அதற்கு முன்பாக ஒடிசா மாநிலத்தில் SBI வங்கியில் வேலை செய்து வந்தார் என்றும் எனவே அதன் அடிப்படையில் திருமணம் நிச்சயிக்கப்பட்டதென்றும், 22.02.2024 அன்று திருமண வரவேற்பு நடைபெற்றதென்றும், அதற்கான செலவுகளை பகிர்ந்து கொள்ளலாம்என்று 1ம்எதிர கூறினார் என்றம், ஆனால் 1ம் எதிரி அவரது பங்கான ரூ.50ஆயிரத்தை கொடுக்க பணமில்லை என்று சொன்னார் என்றும், எனவே நிகழ்நிலைபுகார்தாரர் Gpay யின் மூலம் ரூ.50 ஆயிரம் அனுப்பினார் என்றும், திருமணம் முடிந்தும் 1ம் எதிரி தாம்பத்திய உறவில்ஈடுபடாமல் இருந்து வந்தார் என்றும், சிலநாட்கள் கழித்து 1ம் எதிரி ஆண்மையற்றவர் என்பதை தெரிந்து கொண்டதாகவும் அதன்பிறகு 1ம்

எதிரி வேலைக்கு செல்லாமல் இருந்து வந்தார் என்றும், அதன்பின்பு அவரது நடவடிக்கைகளில் மாற்றம் தெரிந்தது என்றும், அதன்பின்பு 1ம் எதிரி வேலைக்கு எதுவும் செல்லாமல் இருந்து வந்தது என்றும், அவர் பொய்யான வங்கி பரிவர்த்தனைகளை கொடுத்ததாக ஒப்புக் கொண்டார் என்றும், அதன்பின்பு நிகழ்நிலைபுகார்தாரர் அவரது பெற்றோரிடம் தகவல் தெரிவித்தார் என்றும், அதன்பிறகு 1ம் எதிரியின் போன் மற்றும் லாப்டப்பை ஒப்பன் செய்து பார்த்தபோது கடந்த 2020 ஆண்டு முதல் 1ம் எதிர ஆண்மை விருத்திக்குண்டாக மாத்திரை மருந்துகளை இணையதளம் வழியாக வாங்கியுள்ளது தெரியவந்ததென்றும், அதனால் நிகழ்நிலைபுகார்தாரர் அதிர்ச்சி அடைந்து அவரின் பெற்றோரின் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றும், அதன்பின்பு 2 முதல் 7 எதிரிகள் சமாதானம் பேசி அவர்களை செய்த தவறை ஒப்புக்கொண்டார்கள் என்றும் எனவே, தன்னை ஏமாற்றி மோசடி செய்து ஆண்மையற்றவர் என்பதை மறைத்து திருமணம் செய்த குற்றத்திற்காக எதிரிகளின் மீது இதச சட்டப் பிரிவுகள் 498(A), 417, 420, 465, 468, 471 ன் கீழ் கிழக்கு அனைத்து மகளிர் காவல் நிலைய, காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் கு.வி.மு.ச. பிரிவு 173(2)ன் கீழ் இறுதி அறிக்கை 17.12.2024 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) நகல்கள் வழங்குதல் :**

இந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.1643/2024 என கு.வி.மு.ச. பிரிவு 190(1)(ஆ)ன் கீழ் 31.12.2024 ம் தேதியன்று கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது. எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் இந்த வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. 207 பிரிவின் படி 10.02.2025 ம் தேதி எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

**4. குற்றச்சாட்டு வனைதல் :**

எதிரிகளுக்கு போதிய அவகாசம் வழங்கப்பட்டது. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில், எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்தரம் இருப்பதாக தோன்றியதால் 24.02.2025 ம் தேதியன்று எதிரிகளுக்கு இதச சட்டப் பிரிவுகள் 498(A), 417, 420, 465, 468, 471 ன் கீழ் கேள்விகள் கேட்கப்பட்டும், மேலும் இதச சட்டப் பிரிவுகள் 498(A), 417, 420, 465, 468, 471 ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து தமிழில் விளக்கி வினவியபோதும், எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்றும், குற்றச்சாட்டுகளை மறுத்து

வழக்கு விசாரணைக்கு வேண்டினார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

## 5. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் :

அரசு தரப்பில் **அ.சா.1 மற்றும் அ.சா.2** சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் :

**(6.1) அ.சா. 1. திரு.அனுபமா இந்த வழக்கின் நிகழ்நிலை புகார்தரர் ஆவார்.** அ.சா.1 தனது முதல் சாட்சியத்தில் 1ம் எதிரிக்கும் அவருக்கும் 22.02.2024 அன்று திருமணம் நடந்தது என்றும், அதன்பின்பு எதிரிகளுடன் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தார் என்றும், மேலும் 1ம் எதிரிக்கும் அவருக்கும் சிறுசிறு மனகசப்பு ஏற்பட்டது என்றும், 1ம் எதிரி வேலைக்கு செல்லாததால் குடும்பப்பிரச்சனை ஏற்பட்டது என்றும், அதனால் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் புகாரின் சங்கதிகள் தற்போது நியாபகம் இல்லை

என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 முதல் விசாரணையின் மூலமாக **அ.சா.ஆ–1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள்** குறியீடு செய்யப்பட்டது.

**6.2) அ.சா.2. திருமதி.ரூக்குமணி (காவல் ஆய்வாளர்)**. இவர் தனது சாட்சியத்தில் கடந்த 12.08.2024 ம் தேதி கோவை மாநகர காவல் ஆணையாளர் அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற தபாலைப் பெற்று நிலைய அலுவலில் இருந்த திருமதி. மாலதி உதவி ஆய்வாளர் அவர்கள் முதற்கட்ட விசாரணை முடித்து வாதி மற்றும் எதிரிகளை அழைத்து விசாரித்ததில் குற்றம் உண்மை என தெரிய வந்ததால் அன்றை தினமே நிலைய குற்ற எண். 35/2024 சட்டப்பிரவுகள் 498(A) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதாகவும், பின்னர் வழக்குக்கோப்பு புலன் விசாரணைக்கு தன் வசம் ஒப்படைத்தபோது தான் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே புகார்தாரர் அனுபாமா, மற்றும் சாட்சிகள் மாலதி மற்றும் உதவி ஆய்வாளர் திருமதி. மாலதி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்களை பதிவு செய்ததாகவும், 1ம் எதிரியின் வங்கிக்கணக்கு பரிவர்த்தனைகளை

22.08.2024 ம் தேதி BSA பிரிவு 63(4)(c) ன் சான்றுடன் பரிவர்த்தனைகளைப் நகல் பெற்றதாகவும், 18.10.2024 அன்று சாட்சிகள் ராஜம்மாள், ஜெயக்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்களை பதிவுசெய்ததாகவும், 21.10.2024 அன்று வாதி அனுபமா 17.10.2024 ம் தேதி விசாரணைக்கு ஆஜராகும் போது வாதியின் அம்மா மாலதி என்வர் ஆஜர் செய்த HP Laptop மற்றும் நீல நிற சாம்சங் போன் ஒன்றை ஆஜார் செய்ததை படிவம் 91 ல் கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் 11.11.2024 ம் தேதி HP Laptop மற்றும் சாம்சங் போன் ஆகியவற்றை தடய அறிவியியல் ஆய்வகத்திற்கு அனுப்பி ஆய்வு செய்ய வேண்டுகோள் கடிதம் சமர்ப்பித்ததாகவும், கடந்த 30.11.2024 ம் தேதி சித்தமருத்துவர் கிருஷ்ணமூர்த்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 07.12.2024 அன்று வாதி அனுபாமா விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 07.12.2024 அன்று சாட்சிகள் ஜீவானந்தம், புனிதா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்களை பதிவுசெய்ததாகவும், பின்னர் 16.12.2024 அன்று HDFC வங்கியின் மேலாளர் திரு.சுப்பராயன் என்பவர விசாரித்து வாதி அனுபமாவின் வங்கிக்கணக்கு விவரங்களைப்பெற்று அவரிடம் BSA பிரிவு

63(4)(c) ன் சான்றிதழைப் பெற்றதாகவும், 17.12.2024 அன்று 1ம் எதிரி திருமணத்தின்போது பணிபுரிந்ததாக சொல்லப்பட்ட மான் எல்க்ட்ரோ தனியார் நிறுவனத்திற்கு எதிரியின் விவரம் குறித்து இ–மெயில் ஒன்று அனுப்பினேன். பின்னர் சாட்சிகள் சுப்பர் மன், அருள்மகேஷ், ஜென்சிரிமினோ, மற்றும் மாலதி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அதே தினம் அன்று இவ்வழக்கின் சட்டப்பிரிவு 498(A) இதசவை சட்டப்பிரிவுகள் 498(A), 417, 420, 465, 468, 471 இதச ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையுடம் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அவரது முதல் விசாரணையின் மூலமாக **அ.சா.ஆ.6** சாண்றாவணம் குறியீடு செய்யப்பட்டது.

**7. கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி வினவுதல்:**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில், எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து, கு.வி.மு.ச.313(1)(ஆ) பிரிவின் படி 11.12.2025 ம் தேதி வினவியபோது, எதிரிகள் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை பொய் என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

8. **<u>தீர்வுக்குரிய பிரச்சனை</u> :**

**எதிரிகளின் மீது** இதச சட்டப் பிரிவுகள் 498(A), 417, 420, 465, 468, 471 ன் கீழ் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து அரசு தரப்பில் சந்தேகமற நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

9. **<u>தீர்வு</u>**

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அரசு தரப்பு ஆவணங்கள், சாட்சிகள் பரிசீலனை செய்யப்பட்டது. அ.சா.1 அவரது முதல் விசாரணையில் பிறழ்சாட்சியாக சாட்சியம் அளித்திருந்தாலும், எதிரிகளின் மீதான குற்றச்சாட்டு, அரசு தரப்பு அ.சா.2 ன் சாட்சியத்தின் மூலமாகவும், மற்றும் சான்றாவணங்கள் மூலமாகவும் நிரூபிக்கப்பட்டதாகவும், எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமாயும், அரசு தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தினை முன்வைத்துள்ளார். மாறாக எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் ஏற்பட்ட மனகசப்பு மற்றும் குடும்ப பிரச்சனையின் காரணமாக அ.சா.1 புகார் கொத்துவிட்டார் என்றும், தற்போது அவர்கள் சமாதானம் ஆகிவிட்டார்கள் என்றும், மேலும் இந்த வழக்கை சமரசமாக முடித்துக்கொள்ள குவிமுச பிரிவு 320 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டதாகவும், எனவே, அவர்கள் சமாதானம் ஆகிவிட்டபடியால் எதிரிகள் குற்றமற்றவர்கள் என்றும்,

எதிரிகளை விடுதலை செய்யவேண்டுமென்றும் வாதத்தினை முன் வைத்துள்ளார்.

**10.** அரசு தரப்பு வழக்கினை நிரூபிக்கும் பொருட்டு, அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. **அரசுத்தரப்பில் மற்ற பட்டியல் சாட்சிகளை விசாரிப்பதிலிருந்து விலக்கு கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

**11.** இந்த வழக்கில் அ.சா.1 தனது முதல் விசாரணையில் தனது புகாரை சங்கதிகளை ஒத்து சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், அவரது முதல் விசாரணையில் அ.சா.1 க்கு 1 ம் எதிரிக்கும் ஏற்பட்ட மனகசப்பின் காரணமாகவும் மேலும் மற்ற எதிரிகளிடம் ஏற்பட்ட குடும்பப்பிரச்சனையின் காரணமாக எதிரிகளின் மீது புகார் கொடுத்துவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், புகாரில் உள்ள சங்கதிகள் அவருக்கு நியாபகம் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அவர் அரசுத்தரப்பிற்கு ஆதரவாக தனது முதல் விசாரணையில் சாட்சியம் அளிக்காததால்

அரசுத்தரப்பில் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அவர் அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். மேலும் எதிரிகள் தரப்பில் அ.சா1 ஐ குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். குறுக்குவிசாரணையின் போது அ.சா.1 இந்த வழக்கில் அ.சா.1க்கும் 1 முதல் 7 எதிரிகளுக்கும் சமாதானம் ஏற்பட்டு அ.சா.1ம் 1ம் எதிரியும் சமரசமாக விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், சமாதனத்தின் அடிப்படையில்தான் சமரச மனு தாக்கல் செய்யப்பட்டதென்றும், 1 முதல் 7 எதிரிகளை இந்த வழக்கிலிருநது விடுதலை செய்ய தனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.1 ன் சாட்சியத்தை கருதும்பொழுது அவரின் சாட்சியம் அரசுத்தரப்பு வழக்கிற்கு சாதகமாக அமையவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. இந்நிலையில் அரசுத்தரப்பு வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளில் எஞ்சியுள்ள சாட்சி புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியம் மட்டுமே ஆகும். அவர் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.2 வழக்குக்கோப்பின் அடிப்படையில் வழக்கை புலன் விசாரணைக்கு

எடுத்துக்கொண்டு வாக்குமூலம் பதிவு செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்திருந்தாலும், அவரது சாட்சியம் அரசுத்தரப்பு வழக்கை நிரூபிக்க போதுமானதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**14.** எனவே, அரசுத்தரப்பு சாட்சிகளான அ.சா.**1** மற்றும் அ.சா.**2** ஆகியோர்களின் சாட்சியங்களை ஆராயும்பொழுது அந்த சாட்சியங்கள் எதுவும், எதிரிகளின் மீதான குற்றச்சாட்டினை நிரூபிக்கும் விதமாக எந்தவித சாட்சியம் அளிக்கவில்லை. ஆகவே அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கினை வலு சேர்க்கும் விதமாக அமையவில்லை என்றும், எதிரிகளின் மீதான குற்றச்சாட்டினை தீர்மானிக்க எந்த வகையிலும் பலனளிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. அ.சா.1 ன் சாட்சியம் இந்த வழக்கிற்கு எவ்வகையிலும் பலன் அளிக்காத நிலையில், அ.சா.2 ன் சாட்சியத்தை மட்டுமே வைத்து எதிரிகளின் மீதான குற்றச்சாட்டினை நிரூபிக்க போதுமானதாக அமையவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**15.** இவ்வழக்கு சம்பவத்தில், அ.சா.1 தான் பாதிக்கப்பட்ட நபர் ஆவார். அவர் அரசு தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளுக்கு முற்றிலும் முரணாக சாட்சியம் அளித்துள்ளது அரசு தரப்பு வழக்கின் மீது மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவே உள்ளது. அ.சா.2 ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகள் குற்றம் புரிந்ததாகவோ, எதிரிகளின் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதாகவோ முடிவு செய்ய இயலாது என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. எனவே அ.சா.2 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து, எதிரிகள் குற்றவாளிகள் என கருத முடியாது என இந்நீதிமன்றம் கருதுகின்றது. அரசுத்தரப்பில் முன் வைக்கப்பட்ட சாட்சியங்களும், எதிரிகளை குற்றச்சாட்டுடன் சந்தேகத்திற்கு இடமின்றி இணைக்கும் வகையில் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**16.** **இறுதியாக,** அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில், எதிரிகளின் மீது இதச சட்டப் பிரிவுகள் 498(A), 417, 420, 465, 468, 471 ன் கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**17.** அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், எதிரிகளின் மீதான குற்றச்சாட்டு, அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரிகள் விடுதலை செய்வதே நீதியின்பால் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இறுதியாக இந்நீதிமன்றம் முடிவுசெய்கிறது. எனவே அரசுத்தரப்பு வழக்கில் ஏற்பட்ட சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக வழங்கி, அவரை குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**18.** ***முடிவில்***, எதிரிகளின் மீது இதச சட்டப் பிரிவுகள் 498(A), 417, 420, 465, 468, 471 ன் படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபணமாகாததால், அவர் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, பி.என்.எஸ்.எஸ்.271(1)–ன் படி அவரை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது.

**19.** இவ்வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை, அதனால் வழக்குச் சொத்து பற்றிய உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை.

## 20.இழப்பீடு

இந்த வழக்கின் பாதிக்கப்பட்ட நபர்களான அ.சா.1 பிறழ்சாட்சியமாக சாட்சியம் அளித்துள்ளபடியால் இழப்பீடு பெற எந்தவெறு பரிசீலனையும் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26 ம் நாள் வியாழக்கிழமை அன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SINDHU GOPALSAMY Digitally signed by SINDHU GOPALSAMY

நீதித்துறை நடுவர்
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயம்புத்தூர்.

**<u>அட்டவணை</u> :**

**<u>அரசுத் தரப்பு சாட்சிகள்</u>** :

| சாட்சி எண் | அரசு தரப்பு சாட்சிகளின் பெயர் | முதல் விசாரணை செய்த தேதி | அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்த தேதி | எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்த தேதி |
|---|---|---|---|---|
| அ.சா.1 | அனுபமா | 08.07.2025 | 08.07.2025 | 08.07.2025 |

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.2 | திருமதி. ரூக்குமணி | 21.11.2025 | -- | 21.11.2025 |

<u>அரசுத் தரப்பு சான்றாவணங்கள்</u> :

அ.சா.ஆ.1 – புகாரில் உள்ள கையெழுத்து

அ.சா.ஆ.2 – திருமண அழைப்பிதழின் அசல்

அ.சா.ஆ.3 – திருமணத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படம்

அ.சா.ஆ.4 – 63(4)(c) BSA சான்றிதழ்

அ.சா.ஆ.5 – HDFC Bank Statment

அ.சா.ஆ.6 – முதல் தகவல் அறிக்கை

**<u>அரசுத் தரப்பு சான்றுப் பொருட்கள்</u> : இல்லை**

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

**<u>பின்குறிப்பு</u> :**

1. வழக்கு விசாரணையின்போது, எதிரிகள் பிணையில் இருந்து வந்துள்ளார்.

2. சாட்சிகள் யாரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. முடிவு அறிக்கை காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

4. எதிரிகளை விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

SINDHU GOPALSAMY Digitally signed by SINDHU GOPALSAMY

நீதித்துறை நடுவர்
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயம்புத்தூர்.